# திருப்புகழ்:- பக்திக் கட்டமைப்பில் தொகைச் சொற்கள்

முனைவர் கி. சங்கர நாராயணன்
*உதவிப் பேராசிரியர், தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை,*
*சென்னைப் பல்கலைக்கழகம்*
*மெரினா வளாகம், சென்னை – 600005*
krksankaraatamil@gmail.com

தமிழ்க் கடவுள் முருகப் பெருமானின் சிறப்புகளையும் செயல்களையும் பெருமைகளையும் எடுத்துரைப்பது திருப்புகழ். இத்திருப்புகழ் கட்டமைப்பில் தொகைச் சொற்களின் பங்கு அதிகமுள்ளது. தொகைச் சொற்களை விரிப்பதால் கிடைக்கும் தொகை வகைகளின் வாயிலாக முருகக் கடவுளரின் சிறப்புகளையும் செயல்களையும் அறிய முயல்வதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

தொகை என்பது மறைந்து வருவது. தொகா என்பது வெளிப்பட்டு வருவது. தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் எச்சவியலில் தொகைச் சொற்களின் வகைகளை விளக்குகிறார். வேற்றுமைத் தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்ற ஆறினைப் பின்வருமாறு சுட்டுகிறார்.

"வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையேஅன்மொழித் தொகையென்று
அவ்வாறு என்ப தொகைமொழி நிலையே"
(தொல்.சொல்.895)

பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் வேற்றுமை முதலான அறுவகைப் பொருட்புணர்ச்சியின்கண் அவற்றின் உருபுகள் நடுவிலே தொக்கு நிற்ப, இரு சொற்கள் அல்லது பல சொற்கள் தொடர்ந்து ஒரு சொல்போல வருபவை தொகை நிலைத் தொடர் மொழிகள் என்கிறது நன்னூல்.

"பெயரோடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத்
தொடர்ச்சொல்" (நன்.சொல்.361)

இந்தத் தொகை நிலைத் தொடர் மொழிகள் வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறு வகைப்படும் என்பதைப் பின்வரும் நூற்பா வழி விளக்குகிறார் நன்னூலார்.

"வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை
அன்மொழி எனஅத் தொகை ஆறுஆகும்"
(நன்.சொல்.362)

**ஆறு சமயம்:**

சைவம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சாக்தம், சௌரம் (குன்று.123)

**புராணம் பதினெட்டு:**

சைவம், பௌஷ்யம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமன்ம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், நாரதீயம், வைணவம், பாகவதம், பிரமம், பதுமம், ஆக்னேயம், பிரமகைவர்த்தம் (குன்று.123)

**அட்ட சிட்ட குணம்:**

தன் வயத்தனாதல், தூயவுடம்பினாதல், இயற்கையுணர்வி னனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை (குன்று.135)

**ஐம்பூதம்:**

மண், நிர், கனல், காற்று, விண் (குன்று.141)

**ஐம்புலன்:**

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் (குன்று.141)

**நான்கு மகா வாக்கியம்:**

சிரவணம், மனனம், நிதித்யாசனம், நிட்டை கூடுதல் (குன்று.149)

**பூதம் ஐந்து:**

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் (குன்று.157)

**புலன் ஐந்து:**

சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் (குன்று.157)

**கன்மேந்திரியம் ஐந்து:**

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் (குன்று.157)

**கன்ம விஷயம் ஐந்து:**

வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆநந்தம் (குன்று.157)

**கரணம் நான்கு:**

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் (குன்று.157)

**நாடி பத்து:**

இடை, பிங்கலை, சுழுமுனை, இகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு (குன்று.157)

**வாயு பத்து:**

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் (குன்று.157)

**சயம் ஐந்து:**

அமா்வா, பகிா்வா, சலவா, மலவா, சுக்கிலவா (குன்று.157)

**கோசம் ஐந்து:**

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் (குன்று.157)

**ஆதாரம் ஆறு:**

மூலாதாரம், சுவா திஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை (குன்று.157)

**மண்டலம் மூன்று:**

அக்கினி, ஆதித்த, சந்திர (குன்று.157)

**மலம் மூன்று:**

ஆணவம், கன்மம், மாயை (குன்று.157)

**தோஷம் மூன்று:**

வாதம், பித்தம், சிலேத்துமம் (குன்று.157)

**ஏடணை மூன்று:**

தனேடணை, தாரேடணை, புத்திரேடணை (குன்று.157)

**குணம் மூன்று:**

இராசசம், தாமதம், சாத்துவீகம் (குன்று.157)

**இராகம் எட்டு:**

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இடும்பை, அகங்காரம் (குன்று.157)

**வினை இரண்டு:**

நல்வினை, தீவினை (குன்று.157)

**அவஸ்தை ஐந்து:**

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் (குன்று.157)

**உபாங்கம் நான்கு:**

மீமாம்ஸை, நியாயம், புராணம், ஸ்மிருதி (குன்று.157)

**மும்மூர்த்தி:**

அரன், அயன், அரி (குன்று.163)

**வேதம் நான்கு:**

ருக் யஜுா் சாமம் அதா்வணம் (குன்று.163)

**முத்தமிழ்:**

இயல், இசை, நாடகம் (குன்று.167)

**ஐங்கருவிகள்:**

தோற்கருவி, தொளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி (குன்று.171)

**கன்மேந்திரியம் ஐந்து:**

வாக்கு, பாணி, பாதம், பாயுறு, உபஸ்தம் (குன்று.191)

**கரணம் நான்கு:**

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் (குன்று.191)

**தன்மாத்திரை ஐந்து:**

சப்த பரிச ரூப ரச கந்தம் (குன்று.191)

**கன்மம் ஐந்து:**

வசனம், கமனம், தானம், விசா்க்கம், ஆனந்தம் (குன்று.191)

**வாயு பத்து:**

பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாயகன், கூா்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் (குன்று.191)

**ஆறுமுகம்:**

முற்றறி வுடைமை, வரம்பிலின்ப முடைமை, இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், தம்வய முடைமை, பேரரு ளுடைமை, முடிவிலாற்ற லுடைமை (பழமுதிா்.1)

**தத்துவங்கள் நான்கு:**

செய்வான், செய்வினை, வினைப்பயன், பயன் (பழமுதிா்.5)

**ஆறு திருப்பதி:**

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிா்சோலை (ஆறுதிருப்பதி.2)

**எழுச்சி நான்கு:**

பற்று, அவா, ஆசை, பேராசை (குன்று.16)

**ஏழுலகம்:**

அதல, விதல, சுதல, தராதல, ரசாதல, மகாதல, பாதாள (குன்று.18)

**ஆறுமுகம்:**

1. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, மேல், கீழ் என்ற ஆறு திசைகளையும் பாா்க்கின்ற ஆறுமுகங்களை உடையவா்
2. பராசக்தி, ஆதிசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி, குடிலா சக்தி என்ற இந்த ஆறு சக்திகளும் ஆறுமுகங்கள்
3. அ, உ, ம, நாதம், விந்து, கலை என்ற ஆறும் ஆறுமுகங்கள்

4. மந்திரம், பதம், வன்னம், புவனம், கலை, தத்துவம் என்ற ஆறு அத்துவாக்களே ஆறுமுகங்கள்
5. ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்ற ஆறு குணங்களே ஆறுமுகங்கள்
6. சருவஞ்ஞிதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்த சக்தி, அநந்த சக்தி, சுவதந்திரத்வம் என்ற ஆறு அருட் குணங்களே ஆறுமுகம் (குன்று.26)

**மணம் எட்டு:**

பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், கந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் (குன்று.33)

**சித்தி எட்டு:**

அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் (குன்று.40)

**வள்ளல் ஏழு:**

பாரி, எழிலி, நள்ளி, ஆய், மலையன், ஓரி, பேகன் (குன்று.48)

**நோய் மூன்று:**

பசிநோய், காமநோய், பிறவிநோய் (குன்று.57)

**குணம் மூன்று:**

சத்துவம், ராஜயம், தாமசம் (குன்று.68)

**ஆஷ்ட கஜங்கள்:**

ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம்

**ஐம்பெரும் தொழில்:**

ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் (திருபரம்.3)

**ஐங்கணை:**

மா, அசோகு, முல்லை, தாமரை, கருங்குவளை (திருபரம்.9)

**எழுவகை முனி:**

அகத்தியர், ஆங்கீரசர், கௌதமர், காசிபர், புலத்தியர், மார்க்கண்டர், வசிட்டர் (திருபரம்.12)

**பஞ்சமலங்கள்:**

ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதம் (திருபரம்.15)

**இருநிதி:**

சங்க நிதி, பதும நிதி (திருபரம்.17)

**சப்த தாதுக்கள் ஏழு:**

எலும்பு, தோல், தசை, முளை, சுக்கிலம், இரத்தம், இரதம் (திருச்.18)

**சங்கம் மூன்று:**

முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் (திருச்.30)

**கலைகள் அறுபத்து நான்கு:**

அக்கர இலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், ஜோதிட சாத்திரம், தரும சாத்திரம், யோக சாத்திரம், மந்திர சாத்திரம், சகுன சாத்திரம், சிற்ப சாத்திரம், வைத்திய சாத்திரம், உருவ சாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருந்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திர பரீட்சை, கனக பரீட்சை, இரத பரீட்சை, கசபரீட்சை, அசுவ பரீட்சை, இரத்னபரீட்சை, பூமிபரீட்சை, சங்கி ராமவிலக்கணம், மல்யுத்தம், ஆகருடணம், உச்சாடணம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைப்பீல, வாதம், கௌத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி ஆகாயப் பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப் பிரவேசம், அதிகரிசியம், இந்திரசாலம், மகேந்திர சாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம் (திருச்.41)

**கவி நான்கு:**

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தார கவி (திருச்.41)

**என்குணன்:**

தன்வயத்தவனாதல், தூயுவுடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை (திருச்.62)

**ஐம்பெருங் கணைகள்:**

தாமரைப்பூ, மாம்பூ, முல்லைப்பூ, அசோகம்பூ, நீலோற்பலப்பூ (திருச்.63)

முருகக் கடவுள் தொடர்பான தொன்மக் கதைகள், வரலாற்று நிகழ்வுகள், முருகக் கடவுள் செய்த போர்கள், பக்திப் பெருமிதம், அடியவர்களை ஆட்கொண்ட விதம், சிவபெருமான் சந்திரனைத் தரித்தல், திரிபுரம் எரித்தல், கிரவுஞ்ச மலையின் மீது வேல்விடுதல், இயமனை உதைத்தல், மேருவைச் செண்டால் எரித்தல், தமிழ் பாடுவோர் பின் தாமோதரர் செல்லல், சிதம்பர நடனம், அயனைச் சிறை புரிதல், சிவன் பன்றியின் கொம்பை அணிதல், சிவன் ஆமையின் ஓட்டைத் தரித்தல், சிவன் நாகங்களை ஆபரணமாகக் கொள்ளல், பாரிஜாதம், யாக ரஷ்க, ஆறுமுகச் சிவனானர ஐம்முகச் சிவனார் வழிபடல், மா எறிதல், கங்கையைத் தரித்தல் ஆகிய தொன்மை வரலாற்றுக் கதைகள் போன்றவற்றை விளக்குவதற்குத் தொகைச் சொற்களின் பங்கு இன்றியமையாதவையாகத் திருப்புகழில் அமைந்துள்ளன. திருப்புகழில் இடம்பெற்றுள்ள தொகைச் சொற்களை விரிப்பதின் வழியாக முருகக் கடவுளரின் பெருமைகள், சிறப்புகள், வீரதீரச் செயல்கள், தல வரலாறுகள், வரலாற்றுத் தொன்மங்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. முருகன் புகழ்பாடும்

திருப்புகழ் கட்டமைப்பில் தொகைச் சொற்களின் பங்கு மிகப் பெரியது. திருமால் நெடுமாலாக நிமிர்ந்து நின்று உலகளந்ததைப் போல, ஓரிரு சொற்களில் உள்ள தொகைச் சொற்களை விரித்தால் நீளும் சொற்களின் வழியாக முருகக் கடவுளின் சிறப்புகளை அறியலாம் என்பதை இக்கட்டுரை எடுத்தக்காட்டுகின்றது.

## துணைநின்ற நூற்கள்

[1] கிருபானந்தவாரியார், 1999, திருப்புகழ் விரிவுரை, பழமுதிர்ச்சோலை, வானதி பதிப்பகம், சென்னை.

[2] கிருபானந்தவாரியார், 1996, திருப்புகழ் விரிவுரை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், வானதி பதிப்பகம், சென்னை.

[3] கிருபானந்தவாரியார், 2000, திருப்புகழ் விரிவுரை, குன்றுதோறாடல், வானதி பதிப்பகம், சென்னை.

[4] தமிழண்ணல், 2006, தொல்காப்பியம் சொல்லதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[5] மயிலைநாதர் (உ.ஆ.) 1995, நன்னூல் - விருத்தியுரை, உ.வே.சா.பதிப்பகம், சென்னை.